Address being changed to the facilities of our customers.
V. T & Sons
QUALIFIED OPTICIANS and DENTIST
317, Clock Tower Road, JAFFNA.
(adjoining B. M. C.)
Manager:
Dr. Regi Solaman.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

வாடிக்கையாளரின் நன்மை கருதி இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
வி. ரி. அன் சன்ஸ்
பல் வைத்தியரும் கண் பரிசோதகரும்
317, பணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(B.M.C.க்கு அருகாமையில்)
முகாமையாளர்:
Dr. றெஜி சொலமன்

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு மாசி மீ 23 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 றஜபு பிறை 16 (06 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 20

பாடசாலை செல்லும் போது

## மாணவர்களை தடுத்து வைத்தல் நடக்காதாம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

பாடசாலைகளுக்குச் செல்லும் வேளையில் மாணவர்கள் இந்திய அமைதிப் படையினரால் தடுத்து வைக்கப்பட மாட்டார்கள்.

இவ்வாறு இந்திய அமைதிப் படையின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று நடந்த உண்ணாவிரதத்தின் போது இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அன்னையர் முன்னணியினரிடம் தெரிவித்தார்.

இது குறித்து அன்னையர் முன்னணியைச் சேர்ந்த ஒருவர் கேள்வி எழுப்பிய பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை நேரங்களில் இந்திய அமைதிப் படையினர் விதிச் சோதனையில் ஈடுபட்டாலும் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

ஆனால் பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரங்களில் தடுத்து வைக்கப்படுவதும், சோதனைக்குள்ளாக்கப்படுவதும் தவிர்க்க முடியாதது ஆகும்.

இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார். (ஓ-10)



யாழ் அன்னையர் முன்னணியினர் நேற்று கைலாச பிள்ளையார் கோவில் முன்றலில் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தபோது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம். (படம்: ஜெயம்)

# அன்னையர் உண்ணாவிரதம் அமைதியாய் நடந்தது

## ஒரு வாரத்தில் பலன் இல்லையேல் தொடர் போராட்டம் என அறிவிப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 6

சில மாதகால இடைவெளியின் பின்னர், யாழ்ப்பாணத்தில் அகிம்சைவழிப் போராட்டமான உண்ணாவிரதம், நேற்று அமைதியாக நடந்து முடிந்தது.

யாழ் அன்னையர் முன்னணியைச் சேர்ந்த சுமார் நூறு பெண்மணிகள் நல்லூர் கைலாச பிள்ளையார் கோவில் முன்றலில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

மட்டக்களப்பு அன்னையர் முன்னணியினர் கடந்த இரண்டு வாரங்களாக நடத்தி வரும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தே நேற்றைய அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது.

தமது நேற்றைய உண்ணாவிரதத்துக்கு ஒரு வார காலத்திற்குள் பலன் - பதில் கிடைக்காவிடில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்க யாழ். அன்னையர் திட்டமிட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இந்திய அரசாங்கம் யுத்த நிறுத்தம் மேற்கொண்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனக் கோரியுமே நேற்றைய அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

சுண்டுக்குளி அரியாலை, நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில், மாதகல், இளவாலை, நாவற்குழி ஆகிய பகுதிகளையும் சேர்ந்த அன்னையர் முன்னணி உறுப்பினர்களும் நேற்றைய உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்ட இடத்துக்கு இந்திய அமைதிப் படை உயரதிகாரிகள் வந்து பார்வையிட்டதுடன் அன்னையர் முன்னணியினருடன் கலந்துரையாடவும் செய்தனர். கலந்துரையாடலின் போது தமது கோரிக்கைகளுக்கு ஒருவாரத்தினுள் பதில் கிடைக்க வேண்டும் என்றும்:-

இல்லையேல் நாம் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் அன்னையர் முன்னணியினர் இந்திய அமைதிப் படை அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.



உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த அன்னையரிடம் அமைதிப்படை அதிகாரி ஒருவர் உரையாடுவதைப் படத்தில் காணலாம். (ஓ)

## ஆறும் ஆண்டில் அனுமதி பெற அலையும் மாணவர்!

கொக்குவில், மார்ச் 6

யாழ்ப்பாணப் பகுதி பாடசாலைகளில் ஆறும் ஆண்டில் மாணவர்களைச் சேர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலைகளில் இட நெருக்கடியும் தளபாடப் பற்றாக்குறையும் இருப்பதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

முதலாம் தவணைப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையிலும் தமது பிள்ளைகளுக்கு ஆறும் ஆண்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இடைத் தேர்தல் ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 6

ஹோமகம நாடாளுமன்றத் தொகுதியின் இடைத் தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

இது சம்பந்தமாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை நேற்று விடுத்தார்.

இந்த இடைத்தேர்தல் இம்மாதம் 21ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது. (ஓ-எ)

### சுப நேரம்

06 - 03 - 1988
மாசி 23
ஞாயிற்றுக் கிழமை
சுப நேரம்: 9. 25 முதல் 10. 55 வரை
ராகுகாலம்: 4. 55 முதல் 6. 25 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## மண்டைதீவுக்கு ஏப்ரலில் மின்சாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

மண்டைதீவுக்கு மின்சார விநியோகம் செய்வதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகி விட்டன.

ஏப்பிரல் நடுப்பகுதியில் மண்டைதீவுப் பகுதி வாசிகள் மின்சார விநியோகத்தைப் பெறுவர் என்று இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின.

பண்ணையில் இருந்து மின்கம்பி பொருத்தும் வேலைகள் சில தினங்களுக்கு முன் தொடங்கின.

பத்து லட்சம் ரூபா செலவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. (ஓ-எ)

## விரும்பத்தகாதவர்களை வெளியேற்ற விசாரணை

கொழும்பு மார்ச் 6

ஆயுதப்படை, பொலீஸ் படை ஆகியவற்றில் உள்ள விரும்பத் தகாதவர்களை வெளியேற்றுவது சம்பந்தமான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புப்படைகளில் சேர்ந்து பயிற்சி பெற்ற பின்னர் இடை நடுவில் விலகியவர்கள், சேர விண்ணப்பித்தும் இடம் கிடைக்காதவர்கள் ஆகியவர்கள் பற்றியும் உயர் அதிகாரிகள் விசாரணை நடத்த ஆரம்பித்துள்ளனர். (ஓ-எ)

முச்சந்தி முரளி



வேலை தேடிப் படி ஏறி இறங்கிறதுக்கு இப்ப பாடசாலை அனுமதியிலேயே அனுபவம் பெறட்டும் என்று நினைச்சிட்டினமோ!

## திருமலையில் கல்கத்

புதுடில்லி, மார்ச் 6

இந்திய அமைதிப் படையின் துணைத் தளபதி ஏ. எஸ். கல்கத் நேற்று திருகோணமலை மாவட்டத்தில் உள்ள முதலிக்குளம், பன்குளம் நொச்சிக் குளம் கிராமங்களுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் ஆராய்ந்தர்.

உள்ளூர்ப் பிரமுகர்களுடன் பேச்சுக்கள் நடத்தினர். [ஓ-எ]

### காலமானார்

அவிசாவளைத் தொகுதியின் முன்னாள் எம். பி திரு. பொனி ஜெயசூரியா நேற்றுக் காலமானார். (ஓ-எ)

# மாற்று நடவடிக்கைக்கு எம்மைத் தூண்டும் செயல்

## மட்டக்களப்பில் ஊர்வலம் தடுக்கப்பட்டது பற்றி பாலகுமார்

யாழ்ப்பாணம், மார்ச் 6

தமிழ் பேசும் மக்கள் தமது உணர்வுகளை பிரதிபலிக்கவும், எடுக்கவும் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கை - இந்தியப் படைகள் தடைவிதிக்குமாயின், அது சாகும் வரை உண்ணாவிரதம்போன்ற மிகத் தீவிரமான சாத்வீகப் போராட்ட மாற்று நடவடிக்கையில் நாம் ஈடுபடுவதற்கு எம்மைத் தூண்டிவிடும் நோக்கம் கொண்டனவாகவே அமையும்.

இவ்வாறு ஈரோஸ் பிரமுகர் திரு. வேலுப்பிள்ளை பாலகுமார் உதயனுக்குத் தெரிவித்தார்.

பட்டடிப்பளையில் கடந்த வெள்ளிக்கிழமை ஈரோஸ் ஏற்பாடு செய்திருந்த ஊர்வலம் தடுக்கப்பட்டது குறித்து கருத்து வெளியிடும்போதே பேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

திரு. பாலகுமார் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவற்றை நிவர்த்தி செய்யுமாறு கோரி எம்மால் மட்டக்களப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியை இலங்கைப் பொலீஸாரும், இந்திய அமைதிப் படையினரும் தடுத்ததை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இப்படியான தடை முயற்சிகள் மக்கள் சுதந்திரமான வழிகளில் தமது எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்த முடியாமல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குக்குக் கூடுதலாக ஸ்ரீலங்கா இராணுவத்தினர்

### ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 6

கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்களக் கிராமங்களில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடும் இலங்கை இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா இத்தகவலை வெளியிட்டார்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் நேற்று நடந்த ஐ. தே. க. காரியாலயக் கமிட்டிக் கூட்டத்தில் ஜனாதிபதி பேசினார்.

அப்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் சொன்னதாவது:

மாகாண சபைகளுக்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன.

நாட்டின் நிர்வாகத்தில நேரடியாக ஈடுபடும் வாய்ப்புப் புதிதாக 400 முதல் 500 பேருக்குக் கிடைக்கும் என்றார்.

முதலிக்குளத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 15 பேர் உயிரிழந்த சம்பவம் பற்றியும் ஜனாதிபதி தனது பேச்சில் பிரஸ்தாபித்தார்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி பேசுகையில், "ஜனநாயகத்துக்கு ஆயுதம் சரித்த சிலர் அச்சுறுத்தலாக உள்ளனர். இதற்கு அனுமதிக்கக்கூடாது" என்று சொன்னார்.

கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பேசுகையில், "எம்.பிக்களுக்குரிய அதிகாரங்களில் 50 சதவீதம் மாகாணசபைகளுக்கு வழங்கப்படவுள்ளன" என்றார். (ஓ-எ)

## யாழ். அகதிகள்

## அமைதிப்படையின் தலைமையகத்தில் பதிவு செய்யக் கோரிக்கை

சென்னை, மார்ச் 6

யாழ்ப்பாணத்தில் உள்ள அகதி மக்கள், தங்கள் பெயர்களை அமைதிப்படையின் தலைமை அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகுந்த சான்றிதழ்களுடன் பெயர்கள் பதிவு செய்யப்பட வேண்டும். காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் - இப்படி பாதுகாப்பு அமைச்சு சென்னையில் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-எ)

## சேருநுவரவில் கண்ணி; 19 சிங்களவர் மரணம்!

கொழும்பு, மார்ச் 6

திருகோணமலை மாவட்டத்தில் சேருநுவர என்ற இடத்தில் தரைக்கண்ணி ஒன்று வெடித்ததில் பத்தொன்பது சிங்களவர்கள் உயிரிழந்தனர்.

23 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் 15 பேரின் நிலை அபாயகரமாக இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் விமான மூலமாக அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் மூன்று மணியளவில் அகலை - கந்தளாய் வீதியில் சிற்றுறு எனுமிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கந்தளாயில் இருந்து திருகோணமலை நோக்கி இந்த டிரக் சென்று கொண்டிருந்தது.

இவர்கள் பயணம் செய்து கொண்டிருந்த டிரக் ஒன்று தரைக்கண்ணி மீது ஏறியபோது பலத்த சத்தத்துடன் தூக்கி எறியப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

CCD — V 100 E Sony Video 8 Pro - புதிய ரகம் விற்பனைக்குண்டு தொடர்பு: சிவா ஸ்ரோர்ஸ், 425, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (1600)

எம்மிடம் நல்ல இன சேவற்குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் எந்நேரமும் விநியோகிக்கப்படும். புறொயிலர் குஞ்சுகள் 4, 5ம் திகதிகளில் விநியோகிக்கப்படும். New No. 127, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (1798)

Uplans Farm Ltd., Kandy கோழிக் குஞ்சுகள் 16-03-88 புதன்கிழமை விநியோகிக்கப்படும். (Lohmann) பிறவுண் பேடு ரூ 12 50 (Lohmann) சேவல் ரூ 4 00. முன் கூட்டியே பதிவு செய்யவும் இல. 9 குராவத்தை ரோட். (கந்தையா லேன்) சுன்னாகம். (ஸ்ரேசனுக்கு அருகாமையில்)

சகல இன ரெலிவிசன் கலர் 20" Tube, 12" 20" B/W Tube, Fly Back, ரியூனர், வீடியோடெக் செட், மோட்டர் R. F Converter மற்றும் உதிரிப்பாகங்கள் உடன் விற்பனைக்குண்டு. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம். (810)

நீ கெண்டிசன் C 90, C70, C 50, ஆகிய மோட்டடைக் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, நா. கந்தசாமி, ஞான சேவன் சராஜ், 41/1. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (1630)

### உணவு

Wel comes you to Hotel de Galaxy (Unavagam) (கலக்ஸி உணவகம்) நகரின் மத்தியிலே சுவையான மதிய, இரவு உணவு வகைகளை அருந்த நாடுங்கள்—Galaxy No.30 கன்னாதிட்டிரோட் (சிவன்கோயில்முன்பாக) யாழ்ப்பாணம். We Look after you Better. (1793)

### தையல் வேலை வாய்ப்பு

தையல் வேலையில் குறிப்பாக 'பிறேசியர்' தைப்பதில் நன்கு அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகக் கீழ்க் காணும் முகவரிக்கு நற்சாட்சிப்பத்திரத்துடன் வரவும் ஒரு டசின் தைப்பதற்கு சகல கொடுப்பனவுகள் உட்பட ரூபா 30/- மட்டும் ஊதியமாகத் தரப்படும். முகாமையாளர், பிறீமல்ரி சேவிஸ், ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு. [திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவ பீடத்திற்கும் இடையில்] (1797)

### காணவில்லை

செல்வன் A. இக்னேசியஸ் — லோயலா ஆகிய எனது அடையாள அட்டை இல. 702130905 V பற்றிக்ஸ் வீதிக்கும் இராஜேந்திரா வீதிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மின்சார நிலைய வீதி 2 ம் ஒழுங்கையிலுள்ள உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1816)

### தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு கீழ் குறிப்பிடும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன தகமைகளுடன் முன் அனுபவம் உடையோர், உடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:- விளம்பர இல-80, C/o உதயன் நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

1. கணக்கியல் லிகிதர் (Accounts Clerk) 2. விற்பனைப்பிரதிநிதி( Sales Rep) 3 இரவு நேரக வலாளி (Night Watcher (1634)

மர வியாபார மரம் அரிவு நிலையத்திற்கு கணக்காளர் தேவை. நடுத்தர வயதினர், முன் அனுபவம் உள்ளோர் விரும்பத்தக்கது. அண்மையில் வசிப்போருக்கு முன் உரிமை வழங்கப்படும். தேவி அரிவுத் தொழிற்சாலை, ஸ்தபகர் அமரர் நா. செல்லையா சங்கானை

### றேனியோ

கிளின்-கட் உங்களை என்றும் வரவேற்கின்றது. றேனியோ வேலைகளுக்கு என்றும் நீங்கள் நாடும் இடம்; கிளின்-கட் இல:- 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு

கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில் மின்சார, தண்ணீர் வசதியுடன் பெரிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. உடனடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- P. A. ஆனந்தவேல், இல 7, நிகலஸ் வீதி, கச்சேரி நல்லூர்வீதி கண்டுகுளி [1635]

சகல வசதிகளுடனும் கூடிய வீடு ஒன்று திருநெல்வேலிவடசுருபலாலி வீதியில் வாடகைக்கு விடப்படும் தொடர்பு கொள்க. S தியாகராஜா தியாகம்' பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி. (1819)

சகல வசதிகளுடனும் கூடிய நல்ல நிலையில் உள்ள நல்லூர், கோவில் வீதியில் அமைந்திருக்கும் மாடி வீடு வாடகைக்கு விடப்படும். பிரத்தியேக வாசல் உண்டு. கடிதம் மூலம் தொடர்பு கொள்க. உதயன் விளம்பர இலக்கம்: 80 No 15 இரண்டாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (1821)

### வகுப்புக்கள்

பிற்மன் இலண்டன் பரீட்சைக்குரிய சுருக்கெழுத்து, தட்டெழுத்து தமிழ், ஆங்கிலம், வகுப்புகள் ஆரம்பம்:- திங்கள் 10 30 A. M விபரங்கட்கு: Bit-mans Institutes Manipay. (18244)

சகல வகுப்புகளுக்கும் தூய கணிதம் கற்பிக்கப்படும் தொடர்பு கொள்ள நேரம். சனி ஞாயிறு 2 00 3.00 P.m முகவரி No 180, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (1623)

### கம்பியூட்டர் கல்வி

பல்கலைக்கழக அனுமதி பெற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கான குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் பிரத்தியேக கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன ஆரம்பம்: 7 - 03 - 88 Unikco Computer Centre, No. 5, மின்சார நிலைய வீதி, 2ஆவது ஒழுங்கை, யாழ்ப்பாணம். (உபதபாற் கந்தோர் அருகாமை)

---

## Technical Courses
## தொழில் பயிற்சி நெறிகள்

Air condition & Refrigeration
Motor Mechanism
Electrical wiring &
Radio T. V. Deck

ஆரம்பம்:- 14-03-1988.

★ உங்கள் பதிவுகட்கு ★

**North Ceylon TECHNICAL INSTITUTE**
14, St Peters Lane,
JAFFNA.

---

குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில்
## கம்பியூட்டர் கல்வி
## Computer Programming In Basic

பயிற்சிக்காலம்: 40 நாள்
ஆரம்பம்: 7 - 03 - 88
கட்டணம் 750/- மாத்திரம்
O/L படித்த இருபாலாரும் சேரலாம். சான்றிதழ் வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவு நாள்: 6-3 88

**Unikco Computer Centre**
NO. 5 மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை
யாழ்ப்பாணம்
(உபதபாற்கந்தோர் அருகாமையில்)

---

## JAFFNA ENGLISH ACADEMY
(A LUX IN TENEBRIS)

### TOEFL

A new batch commencing on 14th March.
Lectures on Mondays, Wednesdays 9 to 11 a m.

Duration: 3 Months
Course Fee: Rs. 250/- only
Lectures: KANDIAH NAVARENDRAN

### ● HIGHER ENGLISH COURSE: (a crash course)

An integrated approach to the study of English encompassing the important aspects of English language and literature

**The Syllabus Comprises the following:**

(a) Shakespeare's Romeo & Juliet (original text)
(b) Bernard Shaw's Arms And The Man (original text)
(c) Charles Dickens's Hard Times (Original text)
(d) Essays and Letter Writing
(e) Precis and Comprehension
(f) idioms and Proverbs
(g) Literary Criticism
(h) Poetry
(i) Vocabulary, Phonetics, Grammar etc. etc

Duration: 4 months
Commencement:- 5th March
Lectures on: Saturdays & Sundays 4-00 to 5-30 p. m.
Course fee: Rs. 350/- only
Lectures: KANDIAH NAVARENDRAN

### ● SPOKEN ENGLISH: (a crash course)

வயது வந்தவர்களுக்கும் உத்தியோகம் பார்ப்பவர்களுக்கும்

Lectures on Tuesdays & Thursdays 4-00 to 5-30 p. m.
Commencement: 15th March
Course fee: Rs. 150 - only
Lectures: KANDIAH NAVARENDRAN

Lack of knowledge of spoken English leads to tragic linguistic accidents. We 'll help you to avoid them. Let not your future suffer owing to lack of spoken English. If you are ready for a move—take the first step in the right direction by coming to us
9, றக்கா லேன்,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

---

## WANTED

Chundikuli Girls' College

POST OF TEACHER

Graduate Teacher to teach Zoology and Chemistry in the Advanced Level Classes. Apply before 11th March 1988

PRINCIPAL

---

## காணி விற்பனைக்கு

மல்லாகச் சந்திக்கு அருகாமையில் 3 பரப்பு 17.5 குழி விஸ்தீரணமுள்ள காணி அத்திவாரத்துடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்:-
த. பிஞன்ஸ் கொம்பனி லிமிட்டெட்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (1615)

---

## S. T. M. TRADERS
எஸ். ரி. எம். றேடர்ஸ்
760/A K. K. S Road
JAFFNA.

சிறுவ MASH, பிறிமா MASH தவிடு புண்ணாக்கு போன்ற சகல கால் நடை உணவு வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள வேண்டிய இடம்.

எஸ். ரி. எம். றேடர்ஸ்
760/A கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.

---

## சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டம் எதிர்வரும் 19-3-88 சனிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கொத்தணி அதிபர் K. S. குகதாசன் தலைமையில் நடைபெறும். தயவு செய்து அங்கத்தவர்கள், பழய மாணவர்கள் அனைவரும சமூகமளிக்கவும்.

நன்றி

A. துரைராசா
செயலாளர்
(1820)

---

3 ஆவது மகத்தான வாரம்
## வின்ஸர் வெண்திரையில்
10.30, 2.30
கமல் ஹசன் நடித்த
## விக்ரம்
இந்திய ஏவுகணை 'அக்னி புத்ரா'வின் பயங்கர விளைவுகளிலிருந்து காப்பாற்றுகிறான்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### பகீரதன் கணேசமூர்த்தி

அன்னையின் மடியில் 06 - 09 - 1979
ஆண்டவன் அடியில் 05 - 02 - 1988

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்த் திகழ்ந்தஎங்கள் அன்புச் செல்வா எங்களின் உள்ளத்தில் ஒளி கின்ற மெய்ச் சுடரே எங்கள் எல்லோரையும் இருள் விளக்கொளியில் ஆழ்த்தி விட்டு இன்றுடன் 31வது நாள் ஆகிவிட்டது. என் கண்ணே காற்றாய்ப் பறந்தாய் பகீரதா கனவாய் முடிந்தது எமக்கு. உனது பிரிவால் இன்றும் என்றும் வாடி வருந்தி எல்லாம் வல்ல கோலை வைரவ முருகப்பெருமானை வேண்டி நிற்கும் உன்:-

அப்பா, அம்மா, அன்புஅக்கா, அண்ணாமார், தம்பிமார், ஆச்சி, அப்பம்மா, தாததா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், அன்பின் மாமாமார்கள், சித்திமார், அத்தைமார், மைத்துனமார், மைத்துனிமார். மற்றும அனைவரும்.

அழகாபுரி,
காரைநகர். 6-3-88 (1808)

---

## தவறிவிட்டது

K. பேரின்பநாயகி ஆகிய எனது பேர்ஸ் (சாம்பல் நிறம்) 03/03/88 அன்று காலை 10 30 மணியளவில் கஸ்தூரியார் ரோட்டில் காணாமல் போய்விட்டது அதனுள் K. பேரின்பநாயகி அல்வாய், P பத்மினிதேவி அச்சுவேலி ஆகியோரின் அடையாள அட்டைகளும் வீட்டுத் திறப்பு பணம் ரூபா 700/- என்பனவும் இருந்தன கண்டெடுத்தவர் தயவு செய்து உதயன் அலுவலகம், 15, 2ம் ஒழுங்கை மின்சார நிலைய வீதியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். (1815)

---

வலி - கிழக்குதெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்
## அறிவித்தல்

வலிகிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5000 வரையிலான வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவிருக்கின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/- உம். கேள்விப் பத்திரம் ஒன்று ரூபா 1/- ம் செலுத்தி சங்க வேலைநாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 09-03-88 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்வேலி. பொது முகாமையாளர்
1988-3-2

---

## DIPLOMA IN NURSING
### தாதிப் பயிற்சி நெறியில் டிப்ளோமா

8 ஆம் பிரிவுக்கான வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன. எமது விசேட தகைமைகள்.

இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், இலங்கை அரசாங்க தகுதி பெற்ற தாதிமாரும் மருந்தாளர்களும் அடங்கிய விரிவுரையாளர் குழு.

உங்கள் பதிவுகளுக்கு

**North Ceylon Technical Institute**
14. சென் பீற்றர்ஸ் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

## கொழும்பு-யாழ்-கொழும்பு விமான சேவை

ஆரம்பம்: 12th March 1988
வாரம் 2 நாட்கள்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

## V. M. S.
Travels & Tours (Pvt) Ltd
M 4, Hotel Galadari Meridien
64, Lotus Road, Colombo - 1
T. Phone 544544, 26157
Hotel Gnanams
299, Clock tower Road, Jaffna.

மற்றும் பாஸ்போட், விசா, ரிக்கட் எம்மால் துரித கதியில் செய்து கொடுக்கப்படும். (1606)

---

## இறுதிக் கிரியை அறிவிப்பு

### திருமதி கா. நாகரத்தினம்

மகாலட்சுமி மரக்காலை
(தம்பியையா விறகுகாலை)
வண்ணார்பண்ணை

1988-3-4 உதயனில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்படி காலஞ் சென்ற திருமதி நாகரத்தினத்தின் இறுதிக் கிரியைகள் 1988-3-6 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். உற்றார் உறவினர் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

க. நாகரத்தினம்
31, பிரப்பங்குளம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கின்றவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறது போலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்.

பைபிள்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:-292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24808, 22073
யாழ்ப்பாணம். த.பெ.இல:-23
06.03.1988


## மனச்சஞ்சலத்துக்கு இடம் வையாதீர்!

சில மாத கால இடைவெளியின் பின்னர் யாழ்ப்பாணத்தில் நேற்று மீண்டும் சாத்விகப் போராட்டம் ஒன்று ஆரம்பமானது. யாழ். அன்னையர் முன்னணியினர் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டதையே இங்கு குறிப்பிடுகிறோம்.

மட்டக்களப்பில் கடந்த இரண்டு வாரங்களாக அன்னையர் முன்னணியைச் சேர்ந்த தாய்மார்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது. கிழக்கு அன்னையரின் சாத்வீகப் போருக்கு ஆதரவு தெரிவித்தே நேற்று வடக்குத் தாய்மார்களும் அடையாள உண்ணாவிரதம் இருந்தார்கள்.

கிழக்குத் தாய்மாரின் கோரிக்கை சமாதானம். எனவே அவர்களது உண்ணாவிரதப் போர் நியாயமானது தர்மத்தின் பாற்பட்டது. சமாதானத்தையும், அமைதியையும் விரும்பும் எவரும் அதனை ஆதரிப்பர்.

சமாதானத்துக்காகவும், அமைதிக்காகவும் சாத்வீகப் போராட்டம் நடத்துவோரின் கோரிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் தட்டிக்கழிப்பதோ அல்லது காலம் கடத்துவதோ எந்த விதத்திலும் நன்மை தராது.

உண்ணாவிரதிகளின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து நியாயத்தை நிலைநாட்டி, அநியாயமான உயிரிழப்பைத் தவிர்ப்பது மிக மிக அவசியமும், அவசரமும் ஆகும்.

அதில் அசட்டை காட்டினால் தமிழ்ப் பகுதிகளில் சமாதானமும், அமைதியும் பிறக்கும் என்று எதிர்பார்ப்பது, வானத்தில் மாளிகை கட்டுவதற்குக் கற்பனை செய்வதை ஒக்கும். மக்கள் விரக்தியும், மனச்சஞ்சலமும் அடையத் தொடங்கிவிடுவார்கள். சனநாயகம் மீள முடியாது என்ற எண்ணமும் மக்கள் மனதில் பதிந்துவிடும்.

சம்பந்தப்பட்ட சாரார் இதில் அவதானத்துடன் நடந்து கொண்டு மக்கள் மனச்சஞ்சலம் அடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## கூட்டுறவு ஊழியர் சம்பள மீளாய்வு

### விசாரணை ஆரம்பம்

### ஆலோசனை கோரப்படுகிறது

காங்கேசன்துறை மார்ச் 6

கூட்டுறவுத் துறை பணியாளர்களின் சம்பள மீளாய்வு குறித்து ஆராய நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு தனது விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

கூட்டுறவுத் துறைப் பணியாளர்களின் சம்பளங்கள் பற்றி மீளாய்வு செய்து புதிய சம்பள விகிதங்களைத் தீர்மானிக்க திரு. டபிள்யூ லால் விஜயபாலர் தலைமையில் மேற்படி குழுவை அரசாங்கம் நியமித்துள்ளது.

இக்குழு தனது விசாரணைகளை நடத்தி வருவதால் கூட்டுறவு ஊழியர்கள் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கங்கள் ஆகியவற்றின் ஆலோசனைகளையும் கோரியுள்ளது.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவு ஊழியர்கள், தொழிற் சங்கத்தினர் ஆகியோரை கால தாமதமின்றி இக்குழுவிற்கு ஆலோசனைகள் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-68)

## அனைத்துகஷ்டங்களையும் நீக்கவல்லது திருமுறை

வட்டுக்கோட்டை, மார்ச் 6

எமக்கு ஏற்படும் கஷ்டங்கள் அனைத்தையும் நீக்கக்கூடிய சக்தி திருமுறைகளுக்கு உண்டு. எல்லாவிதமான கஷ்டங்களில் இருந்தும் எம்மைக் காப்பாற்றக் கூடிய திருமுறைகளை நாம் அனைவரும் தினமும் ஓதவேண்டும்.

வட்டுக்கோட்டை மேற்கு உடுக்கியவளைப் பிள்ளையார் கோவில் பஜனை மன்ற 3 ஆவது ஆண்டு விழாவில் சிறப்புரையாற்றிய இளைப்பாறிய ஆசிரியர் சைவ பணி திரு. சி மருத பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

இளைப்பாறிய ஆசிரியரும் பஜனை மன்றத் தலைவருமான திரு. கு. சிவசுப்பிரமணியம் தலைமையில் விழா நடைபெற்றது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு. எஸ். சிவசண்முகமூர்த்தியின் கதாப்பிரசங்க நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

தலைவர் திரு. கு. சிவசுப்பிரமணியம் உரையாற்றும் போது, கடந்த மூன்று வருடங்களாக இச்சங்கம் செய்து வரும் சிறந்த சேவைகளையும் அதனால் மாணவர்கள், பெரியோர்கள் பெற்ற பயன்பாடுகளையும் விளக்கிக் கூறினார். (இ-161)

## சகல மக்களாலும் 'எமது பேராயர்'' என அழைக்கப்படுபவர்

### அம்பலவாணருக்கு வித்தி பாராட்டு

மானிப்பாய், மார்ச் 6

ஒருவர் நடந்து கொள்ளும் முறையில், வாழ்க்கை அமைந்திருக்கும் வகையில் அவர் எந்தச் சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சமுதாயத்தின் தலைவராக ஏற்றுக் கொள்ளப்படுகின்றார். பேராயர் அவர்களும் அந்த வகையில் நடந்து சகல இன, மத மக்களாலும் 'எமது பேராயர்' என அழைக்கப்படுவது பாராட்டத்தக்கது.

தென் இந்திய திருச்சபையின் யாழ்ப்பாண பேராயர் வண. டி.ஜே. அம்பலவாணரின் 60 ஆவது பிறந்த நாள் விழாவையொட்டி நடைபெற்ற கூட்டத்தில், யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் இவ்வாறு கூறினார்.

உடுவில் மகளிர் பாடசாலையில் நடைபெற்ற இப் பிறந்த நாள் விழா வைபவத்துக்கு திரு. ஜெபநேசன் தலைமை வகித்தார்.

முன்னதாக உடுவில் கிறிஸ்தவ ஆலயத்தில் நடைபெற்ற நன்றி நவிலலும் ஆராதனை வைபவத்தில் பேராயர் வண. டி. ஜே. அம்பலவாணர் கலந்து கொண்டார்.

பேராயர் வண. டி.ஜே. அம்பலவாணர் நன்றி கூறுகையில், 20 ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் கிறிஸ்தவ சபைகள் ஓர் சவாலை எதிர்நோக்கியுள்ளன. மக்களுக்குப் பணிபுரிவது மட்டுமல்ல; ஏழைகள் என்று எவரும் இல்லாமல், சகல மக்களும் சம உரிமைகளுடன் பெறவேண்டிய கௌரவத்துடன் வாழவைக்கும் பொறுப்பையே இச்சபைகள் சவாலாக எதிர்நோக்கியுள்ளன என்றார்.

பிஷப். குலேந்திரன், வண. கே.பீ. கோவிந்தராஜ், வண. சல நிதி ஜெ. நேசன், ஜே எம். சபாரத்தினம், ப. பத்மநாதன், ஜி. இராசநாயகம் உட்பட பலர் பேராயர் அவர்களை வாழ்த்தி உரையாற்றினர். (இ.90)

### மானிப்பாயில் நினைவுத் தூபி

மானிப்பாய் மார்ச் 6

கடமையின் போது உடுவிலில் உயிரிழந்த இந்திய அமைதிகாக்கும் படையைச் சேர்ந்த மேஜர் இராமசாமி பரமேஸ்வரன் உட்பட ஆறு படை வீரர்களின் ஞாபகார்த்தமாக நினைவுஸ்தூபி ஒன்றை உடுவில் கிறிஸ்தவ ஆலயத்துக்கு எதிர்ப்புறத்தில் இந்திய அமைதிகாக்கும் படையினர் நிறுவியுள்ளனர்.

## செய்திக்கொத்து

### இடமாற்றம்

கிளிநொச்சி, மார்ச் 6

கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு ச. த. பத்மநாதன் இம்மாதம் முதலாம் திகதி முதல் யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்றுள்ளார். இவரது இடத்திற்கு பன்னார் உதவி விவசாயப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு வேதநாயகம் சில்வா நியமிக்கப்பட்டார். (இ-76)

### பயிற்சி வகுப்பு

மானிப்பாய், மார்ச் 6

மானிப்பாய், வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை வட்டார பாடசாலை 9, 10, 11 ஆம் ஆண்டு வர்த்தக பாட ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்புகள் உடுவில் இராமநாதன் கல்லூரியில் இம்மாதம் 11 ஆம் திகதி நடைபெறும் என வர்த்தக பாடக் கல்வி அதிகாரி திரு. சி. சிவராசா அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை, உடுப்பிட்டி வட்டார ஆசிரியர்களுக்கு இம்மாதம் 12 ஆம் திகதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெறும். (இ-90)

### கரம்பன் குருமடத்தில்

ஊர்காவற்றுறை மார்ச் 6

ஐரோப்பிய ஞானி மெய்ஸ்ரர் எக்காட் பற்றிய கருத்தரங்கு ஒன்று கரம்பன் குருமடத்தில் இன்று ஞாயிறு மாலை 5.00 மணிக்கு நடைபெறும். (இ)

### நியமனம்

கொடிகாமம் மார்ச் 6

கொடிகாமம் திருநாவுக்கரசு கொத்தணி மகா வித்தியாலய துணை அதிபராக கொடிகாமம் திரு. த. சுந்தையா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

### ரூபவாஹினியில்

கொழும்பு, மார்ச் 6

இராமநவமியை ஒட்டி ரூபவாஹினியில் விசேட நிகழ்ச்சி ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை ஒளிபரப்பப்படவுள்ளது. மாலை 5.30 மணிக்கு நடைபெறும் இந்நிகழ்ச்சியை செல்வி தனலக்ஷ்மி இராமச்சந்திரா தயாரித்தளிக்கின்றார். (ஒ-எ)

### கிணறுகளுக்கு குளோறின்

யாழ்ப்பாணம், மார்ச் 6

வாந்திபேதி நோயைத் தடுப்பதில் இருபாலை அண்ணா இந்திரா சனசமூக நிலையத்தின் மாதர் அணியினர் தீவிர முன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக இக் கிராமத்தில் உள்ள சகல கிணறுகளுக்கும் குளோறின் தெளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-01)

### நியமனம்

வடமராட்சி, மார்ச் 6

வவுனியா தொழிற் கந்தோரில் சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தராக கடமையாற்றி வந்த திரு க. சிவப்பிரகாசம் தொழில் ஆணையாளராக தொழில் அமைச்சினால் பதவி உயர்வு வழங்கப்பட்டு உடனடியாக யாழ் மாவட்டக் கந்தோருக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (இ-160)

### வீடு திரும்பவில்லை

அச்சுவேலி, மார்ச் 6

சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த செல்லர் குகன் அல்லது தேவியன் என்ற வயது விபரைக் காண வில்லை.

பனநோயாளியான இவர் வீட்டில் இருந்து புதிய லுமலா சைக்கிளில் வெளியே சென்றார். மீண்டும் வீட்டிற்கு திரும்பவில்லை எனக் கூறப்படுகிறது. (இ-11)



### பொய்யாமொழி

குறள்:

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

பொருள்:

எண்ணுவது எல்லாம் உயர்வைப் பற்றியே எண்ண வேண்டும்; அவ் வுயர்வு கைகூடா விட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக் கூடாது.

## பாஷையூர் மீனவருக்கு உதவ வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச் 6

கடந்த வருட அசம்பாவிதங்களினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தொழில் செய்ய முடியாமல் தங்கள் தொழில் உபகரணங்களை இழந்திருக்கும் பாஷையூர் மீனவர்களுக்கு உதவி வழங்குங்கள்.

இவ்வாறு பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்கம் சனசமூக நிலையத்துக்குள் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி தீர்மானத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளாகவோ சலுகை அடிப்படையில் வங்கிக் கடன் மூலமாகவோ வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. (இ-10)

## மக்களின் அழியாத ஒரே சொத்து கல்வி

வடமராட்சி, மார்ச் 6

மக்களின் அழியாத ஒரே ஒரு சொத்து கல்வி ஆகும்.

கோப்பாய் கல்வி அதிகாரி ஆ. வ. தங்கராசா, அச்சுவேலி இடைக்காடு வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், கல்வி நாட்டு மக்களின் கண்கள் போன்றது. அதை கண்களின் இமை போல் காப்பதால் ஒளிமயமான எதிர்காலத்தைக் காண முடியும் என்றார்.

மேற்படி விளையாட்டுப் போட்டி வித்தியாலய அதிபர் திரு சே. பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டியை கொத்தணி அதிபர் க. சிவசுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

போட்டியில் சிவப்பு இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றது. (இ-160)

### நெடுங்கேணியில்

நெடுங்கேணி மார்ச் 6

நெடுங்கேணியில் அஞ்சல் அலுவலகத்தை சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொண்ட இந்திய அமைதிகாக்கும் படையினர் கடமையில் இருந்த உபதபாலதிபர் ஊழியர்களை வெளியில் அழைத்து அமர வைத்தனர். எட்டு மணித்தியாலத்தில் பின் மாலை நான்கு மணிக்கு இவர்களை விடுதலை செய்தனர்.

### பம்பாய் வெங்காய விதை

அராலி, மார்ச் 6

நல்ல இன பம்பாய் வெங்காய விதை தொல்புரம் கமநல சேவை நிலைய மூலம் இம்மாத நடுப்பகுதியில் விநியோகிக்கப்படவுள்ளது. (இ-12)

தமிழ் நாட்டு சட்டசபை;

# தேர்தலில் கூட்டு யாருடன்? இன்னும் முடிவாகவில்லை

சென்னை, மார்ச் 5

தமிழக சட்டசபைத் தேர்தலில் எந்தக் கட்சியுடன் கூட்டுச் சேருவது என்பது பற்றி இந்திரா காங்கிரஸ் முடிவு செய்யவில்லை.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.கே.மூப்பனார் சென்னையில் முன்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

பிரதமர் ராஜீவ் காந்தியைப் புதுடில்லியில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தி விட்டு, திரு மூப்பனார் விமானம் சென்னை திரும்பினார்.

அதன் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் அவர் பேசினார்.

### மூப்பனார் அறிவிப்பு

தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகிகள் இரண்டொரு தினங்களில் நியமிக்கப்பட விருக்கின்றனர்.

காங்கிரஸின் அடுத்த காரியக் கமிட்டிக் கூட்டம் தமிழகத்தில் எங்கு நடத்துவது என்ற விவரத்தை, உள்ளூர்க் காங்கிரஸ் பிரமுகர்களோடு பேசி முடிவு செய்து கொள்ளப்படும். இப்படி திரு. மூப்பனார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (எ)

### 1988 முடிவில்

## ஆசியாவின் சனத்தொகை முன்னூறு கோடிக்கு மேல்

கோலாலம்பூர், மார்ச் 5

1988 முடிவில் ஆசியாவின் சனத்தொகை முன்னூறு கோடியைத் தாண்டிவிடும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆசிய சனத்தொகை, அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் திரு. ரட்சுவோ தனகா இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கின்றார்.

இந்த நூற்றாண்டு முடிவில் வருடாந்த சனத்தொகை அதிகரிப்பை ஒரு சதவிதமாகக் குறைக்கும் நடவடிக்கைகளை ஆசிய நாடுகள் எடுக்க வேண்டும் இப்படி திரு. தனகா தெரிவித்தார்.

## ஸ்ரீலங்காவில் இந்தியாவின் மேலாதிக்கம் இல்லை

### அமெரிக்க செனட்டர் சொல்கிறார்

வாஷிங்டன், மார்ச் 5

ஸ்ரீலங்காவில் இந்தியாவின் மேலாதிக்கம் இல்லை.

அமெரிக்க செனட்டின் ஆசிய-பசுபிக் கமிட்டி உப தலைவர் ஸ்டீபன் சோலார்ஸ் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

இலங்கையில் இந்தியாவின் மேலாதிக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இலங்கையின் ஆதிபத்திய உரிமை பாதிக்கப்பட்டுள்ளது என இலங்கை அமைச்சர்கள் சிலரும் எதிர்க் கட்சியினரும் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

சட்டபூர்வமாகத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்று அழைத்துத்தான் இந்திய அமைதிப்படை இலங்கைக்குப் போனது.

சென்ற கடமை முடிந்தவுடன் இந்திய அமைதிப்படையைத் திருப்பி அழைக்க பிரதமர் ராஜீவ் காந்தி தயங்க மாட்டார்.

இப்படி செனட்டர் ஸ்டீபன் சோலார்ஸ் [illegible] (எ)

### பயமுறுத்தலைக் கைவிடுக!

ஐ. நா. ஸ்தாபனத்தில் உள்ள பலஸ்தீன விடுதலை இயக்க அலுவலகத்தை மூடுவது என்ற பயமுறுத்தலை கைவிடும்படி அமெரிக்க அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஐ.நா. பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர் [illegible] வேண்டுகோளை விடுத்தார். (எ)

### பாஸ்கோஸ் மீண்டும் மணிலா திரும்பலாம்

ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டப்பட்ட பெர்டினன்ட் மார்கோஸ் மீண்டும் பிலிப்பீன்ஸ் திரும்ப அனுமதிக்கப்படலாம்.

ஜனாதிபதி கொரஸோன் அக்கியூனோவின் தூதர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

இது விஷயத்தைத் தனது ஆலோசகர்களுடன் பரிசீலனை செய்த பிறகு தான் திருமதி அக்கியூனோ முடிவு எடுப்பார் என்றும் தூதர் சொன்னார். (எ)

## வெளி உலகில்

கவர்னர் அலெக்சாண்டர் நடவடிக்கை:

## வீரமணி - ஜேப்பியார் தொடங்கிய கல்லூரிகள் ரத்து

சென்னை, மார்ச் 5

21 நாட்களே ஆட்சியில் இருந்த ஜானகி அரசின் உத்தரவுகள் மறுபரிசீலனை செய்யப்படுகின்றன. இதில் வீரமணி ஜேப்பியார் ஆகியோர் கல்லூரிகளுக்கு அளிக்கப்பட்ட அனுமதியை ரத்துச் செய்வது பற்றியும் கவர்னர் அலெக்சாண்டர் இந்த நடவடிக்கை எடுத்து உள்ளார்.

தமிழ்நாட்டில் ஜானகி தலைமையிலான சிறுபான்மை பலமுள்ள மந்திரிசபை 23 நாள் ஆட்சியில் இருந்தது.

### என்ஜினியரிங் கல்லூரிகள்

அப்போது அவசரம் அவசரமாக சில தனியார் சுயநிதிக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

சென்னை மாவட்ட அ.தி.மு.க (ஜா) செயலாளர் ஜேப்பியார் தாம்பரத்தை அடுத்த படப்பையில் சத்தியபாமா என்ஜினியரிங் கல்லூரி' என்ற பெயரில் தனியார் என்ஜினியரிங் கல்லூரி தொடங்க அனுமதி அளிக்கப்பட்டது.

திராவிட கழக பொதுச் செயலாளர் வீரமணி தஞ்சை மாவட்டம் வல்லத்தில பெரியார் மணியம்மை பெயரில் என்ஜினியரிங் கல்லூரி தொடங்க அனுமதி கொடுக்கப்பட்டது.

### பஸ் பெர்மிட்

இதேபோல அ.தி.மு.க. எம்பியான ஏ.சி சண்முகம் மதுரவாயலில் 'டாக்டர் எம்.ஜி.ஆர். என்ஜினியரிங் கல்லூரி' தொடங்க அனுமதி தரப்பட்டது.

இதேபோல பல புதிய தனியார் பஸ் பெர்மிட்டுகளும் வழங்கப்பட்டன.

ஜானகி மந்திரிசபை தனது மெஜாரிட்டியை சட்டசபையில் நிரூபிப்பதற்கு முன்னதாகவே அவசர கோலத்தில் இந்த அனுமதிகள் வழங்கப்பட்டன.

### கவர்னர் உத்தரவு

இப்போது தமிழநாட்டில் ஜானகி மந்திரிசபை டிஸ்மிஸ் செய்யப்பட்டு ஜனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்பட்டு உள்ளது. புதிய கவர்னராக பி.சி அலெக்சாண்டர் பொறுப்பு ஏற்று உள்ளார்.

ஜானகி ஆட்சியின் போது பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை மறுபரிசீலனை செய்து அவற்றின் தகுதி அடிப்படையில் முடிவு எடுக்குமாறு அவர் உத்தரவிட்டு உள்ளார்.

குறிப்பாக ஜேப்பியார் வீரமணி, ஏ சி சண்முகம் ஆகியோரது என்ஜினியரிங் கல்லூரிகளுக்கு அளிக்கப்பட்ட அனுமதி உத்தரவை மறுபரிசீலனை செய்ய கவர்னர் உத்தரவிட்டு இருப்பதாகத் தெரிகிறது.

### 3 கல்லூரி அனுமதி ரத்து

இதைத் தொடர்ந்து இந்த 3 கல்லூரிகளின் அனுமதி ரத்துச் செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

புதிய கவர்னராக பொறுப்பு ஏற்ற பிறகு அலெக்சாண்டர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ பெனரஸ்
★ காஞ்சிபுரம்
செலெக்ஷன் பெற்றுக் கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.

உதயன்

06 - 03 - 1988 ஞாயிற்றுக்கிழமை

சேட்டிங் சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
★ சகல விதமான றெடிமேட் ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை, யாழ்நகர்.

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



**ஞானப்பிரகாசம் தவராசா (P. T. K.)**

அன்னை மடியில்: 07 - 01 - 1954
ஆண்டவன் மடியில் 06 - 03 - 1985

உன் அன்பான புன்சிரிப்பாலும் பண்பான பேச்சாலும் பணிவான நடத்தையாலும் எம் இதயம் கவர்ந்த அன்பின் தெய்வமே! எங்கு சென்றாய்? போகும்போது மீளமாட்டேன் என ஒரு வார்த்தைதான் சொன்னாயா? ஐயோ! கொடிய அரக்கர்கள் உன்னை பதை பதைக்கக் கொன்று விட்டார்களே! காலமெல்லாம் எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பாய் என இருந்தோம் காலன் உன்னைப் பாதி வயதில் பறித்தானே? நீ சென்றாலும் நீ விட்டுச் சென்ற பாசம் எங்களை விட்டு ஒரு போதும் நீங்காது. உன் ஆத்மா சாந்தியடைய அந்தோனியாரை வேண்டுகின்றோம்.

இப்படிக்கு
மனைவி, பிள்ளைகள், தாய், சின்னையா, மாமிமார்,
தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மைத்துனிமார்,
இளையய்யா, இளையம்மா, அப்பா.
G தேவராசா குடும்பத்தினர்.

சுப்பர்மடம்,
பருத்தித்துறை.
(1792)

## ரவி சாஸ்திரி கப்டன்

புதுடில்லி, மார்ச் 6
ஷார்ஜா கிண்ணத்துக்கான கிரிக்கட் போட்டியில் பங்குபற்றும் இந்தியக் கிரிக்கட் குழுவின் கப்டனாக ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டார். (ஒ-எ)

## மாற்று - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)
செய்து விடுவதுடன் தற்பொழுது முன்வைக்கப்பட்டுள்ள "ஜனநாயகக் கோஷத்தையும் அர்த்த மற்றதாக்கிவிடுகின்றன. தமிழ்பேசும் மக்களது உணர்வுகளைப் பிரதிபலிக்க வந்திருக்கும் தடைகள் இலங்கை - இந்திய ஒப்பந்தம் மீதான எமது நம்பிக்கையை இழக்கச் செய்யும்.

இத்தகைய வழிமுறைகள் எமக்கு மறுக்கப்பட்டால் நாங்கள் பெரும் எண்ணிக்கையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பது போன்ற மிகத் தீவிரமான சாத்வீகப் போராட்ட மாற்று நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு எங்களைத் தூண்டிவிடும் நோக்கம் கொண்டனவாக அமைகின்றன என்றே தமிழ்பேசும் மக்களுக்கு நாங்கள் பகிரங்கப்படுத்த விரும்புகிறோம்.

இவ்வாறு திரு. பாலகுமார் தெரிவித்தார். (ஒ-10)

## சேருநுவர - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)
டிரக் சின்னாபின்னமாகியது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் சேருநுவர பொலீஸ் நிலையத்தில் அடையாளங் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளன (ஒ-எ)

## ஆறும் - - - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
டில் அனுமதி கிடைக்காததால் பெற்றோர் கவலை அடைந்துள்ளனர். (ஒ-ப9)

யாழ். - கொழும்பு
விமான சேவை

பலாலிக்கு விசேஷ போக்குவரத்து வசதிகளுடன் ஒழுங்காக நடைபெறுகின்றது.

We are the only agents who are operating regular flights and permitted to handle Air Passengers at Palaly Airport.

Film roll Processing & Printing Accepted. Delivery within 3 days.

MACK
Communication & Travels
இல. 8, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## நீத்தார் பட்டியல்

### செல்லையா இராசரத்தினம்

நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த திரு செல்லையா இராசரத்தினம் 4-3 88 இரவு 12-00 மணியளவில் பரந்தனில் காலமானார். அன்னார் பரந்தன் பார்மஸி (பரந்தன்) உரிமையாளரும் தனலட்சுமியின் அன்புக் கணவரும் அகிலேஸ்வரனின் அன்புத் தந்தையுமாவார். தியாகராஜா (தொழில் நுட்ப உத்தியோகத்தர், சாவகச்சேரி பிரதேசசபை) இராசலட்சுமியின் அன்புச் சகோதரருமாவார் அன்னாரின் பூதவுடல் நல்லூர் 31/4, செட்டித்தெருவில் உள்ள சகோதரியின் இல்லத்தில் இன்று (6-3-87) ஞாயிற்று கிழமை 3 மணியளவில் ஈமக்கிரியைகள்நடைபெற்று செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

நன்றி

தகவல்: செ தியாகராஜா
31/4, செட்டித்தெரு,
நல்லூர்.

1639

### க வைத்திலிங்கம்

காரைநகர் வேம்படியைச் சேர்ந்த மலாயன் பென்ஷனர் திரு. க. வைத்திலிங்கம் காலமானார். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் கந்தப்பு பூரணம். கனகேந்திரம் செல்லம்மா (மலேசியா), காலஞ்சென்ற கந்தையா, செல்லத்துரை. சண்முகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் தங்கமுத்து (மலேசியா)வின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று ஞாயிறு காலை எட்டு மணியளவில் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல்:
திருமதி பொன்னம்மா வைத்திலிங்கம்
(1640)

### திருமதி நேசம்மா நவரத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியை
முஸ்லிம் மகாவித்தியாலயம், மாத்தளை)

அன்னார் 27-2-88ல் லண்டனில் காலமானார் இவர் காலஞ்சென்ற E. R. நவரத்தினத்தின் அன்பு மனைவியும், மாதகலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மொறிசன் முருகேசு தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், நவநேசராஜா (C. O. கச்சேரி, யாழ்ப்பாணம்), சந்திரவதனா. சரோஜினி (U. K). ஜெயரஞ்சன், ரவீந்திரன் (U K.) ஜயந்தி (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிறிஸ்டி செல்வராஜா (இளைப்பாறிய தபாலதிபர்). Dr S C. கமலநாதன் (U. K), R. சந்திரகுமார் (U K.), சோபிதரமணி, ஜெசி, ஜலீன் (U K.) ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்றவர்களான திருமதி S. பொன்னையா, திருமதி R. நல்லையா, M. செல்வரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அதிசயம் சாமுவேல். H E. அரசரத்தினம், வயலட் செல்வரத்தினம் மற்றும் சொர்ணம் செல்லத்துரை, B. W. அழகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 7-3-88ல் லண்டனில் நடைபெறும்.

தகவல்: கிறிஸ்டி செல்வராஜா,
[illegible] வீதி,
கண்டிக்குளி.
(1817)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் சுவாமிநாதன் பத்மநாதன்**

மலர்வு: 25-06-1960
உதிர்வு: 6-12-1987

இவர் வர்த்தகராகவும், விளையாட்டுக் கழகத் தலைவராகவும், கள்ளப்பாடு ஆதி வைரவர் கடற்றொழிலாளர் சங்க உறுப்பினராகவும் இருந்து கொண்டு பல செய்தும் அன்புடன் எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எம்மை வாழவைத்த தெய்வமே! மின்னாமல் முழங்காமல் சொல்லவொண்ணாத் துயரத்தில் எம்மை ஆழ்த்தி விட்டு மறைந்தீரோ?

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். இவரின் ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டு உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
(1832)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி!



**முத்துத்தம்பி திருநாவுக்கரசு.**

(ஓய்வு பெற்றபொலீஸ் சார்ஜன்ட்)

தோற்றம்: 21 - 09 - 1921
மறைவு: 05 - 02 - 1988

தங்களின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்
மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மானிப்பாய்.

காலஞ்சென்ற மலாயன் பென்ஷனர் தாமோதரம்பிள்ளை சின்னத்துரையின் (மூளாய்) அன்பு மனைவி
**கமலாம்பிகையின்**

## 140 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 22-11-19[illegible]7
மறைவு: 19-10-1987

அன்புத் தாயே,
ஒரு வாரகாலமாக ஓயாது வீழ்ந்த ஷெல்களுக்குத் தப்பிவிட்டீர்களென 18-10-87ல் கண்டபோது மகிழ்ந்தோமே.
'இந்தக் கூனற்கிழவியை எவரும் கொல்லார்கள்' என நம்பிக்கையுடன் கூறினீர்களே!
எம்மைக் காக்க வந்த அன்புக் கரங்கள் ஒரு மாத ஊரடங்கு வேளையில் எம்மைக் காத்திருக்குமென நம்பிக்கையுடன் 17-11-87ல் வந்த நேரம் நடந்த கோரம்......

அன்புத் தாயின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.
சகோதரர், மைத்துனர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கோப்பாய் சந்தி,
கோப்பாய்.
(1787)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் திரு. சண்முகம் முருகேசு பேரம்பலம்**

உரிமையாளர்: நுகேகொடை யவ்னா ஸ்ரோர்ஸ் (யவ்னா)
யாழ்ப்பாணம் குமரன் ரெக்ஸ்ரைல்ஸ்

தோற்றம்: 17-04-1914 மறைவு: 06-03-1983

அன்பின் திருவுருவாய், பாசத்தின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மை நேர்வழி நடத்திய அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து 5ஆம் ஆண்டு மறைந்தாலும் உங்கள் அன்புத் திரு உருவம் என்றும் எம் நெஞ்சை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய திக்கரை முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பொன்னாவளை,
களபூமி,
காரைநகர்.
(1825)

## ஈராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 09 - 12 - 1948
உதிர்வு: 06 - 03 - 1986

**திருமதி சரோஜினிதேவி நரேந்திரசிங்கம்**

(தமிழ்த் தட்டெழுத்தாளர்,
கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.)

நீ இல்லாத எமதில்லம் ஒளிதனை இழந்ததம்மா! எம்முடன் கதைத்துச் சிரித்ததெல்லாம் என்றும் எம் காதினுள் கேட்கிறதம்மா! மீண்டும் நீ பிறவி எடுத்து மலர்ந்திடு எங்கள் குடும்பத்திலே.

இங்ஙனம்
உன் நினைவில் உயிர்வாழும்,
கணவன், பிள்ளைகள்,
பெற்றோர் உடன்பிறப்புகள்,
உறவினர்கள்.

மல்வம்,
உடுவில்,
சுன்னாகம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 06-03-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road Jaffna on Sunday, 6th March 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org